## செய்தி வெளியீடு

நாள் 13.04.2022

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 16.04.2022 அன்று ஓராண்டில் 1,00,000 விவசாய மின் இணைப்பு பெற்ற விவசாய பெருமக்களுடன் காணொளி காட்சி வாயிலாக கலந்துரையாடவுள்ளார் – மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தகவல்

இன்று (13.04.2022) சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓராண்டில் 1,00,000 விவசாய மின் இணைப்பு பெற்ற விவசாய பெருமக்களுடன் 16.04.2022 அன்று காணொளி காட்சி வாயிலாக கலந்துரையாடும் நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்தும், எதிர்வரும் கோடை காலத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவது குறித்தும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் அனைத்து தலைமை பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆய்வு நடத்தினார். ஆய்வின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மற்றும் இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு தேவைப்படும் மின்சாரத்தின் மொத்த தேவையினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக மின் இணைப்பு வழங்கக் கோரி பதிவு செய்து காத்திருந்த விவசாயிகளுக்காக, 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 23.09.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் தமது திருக்கரங்களால் தொடங்கி வைத்தார். கடந்த 6 மாத காலத்திற்குள்

1 இலட்சம்  விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் அனைத்து அலுவலர்களும்  மிகவும் சிறப்பாக செயல்பட்டு இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை சிறப்பிக்கும் வகையில் வருகின்ற 16.04.2022–ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவகத்திற்கு வருகை புரிந்து  ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு ஆணைகளை வழங்குவதற்கான விழாவில் தலைமையேற்று பயன் பெற்றுள்ள விவசாயிகளிடம் காணொலி காட்சி வாயிலாக சிறப்புரை ஆற்றவுள்ளார்கள்.

இந்த கோடைகாலத்தில் இதுவரை இல்லா உச்ச அளவாக 17,196 மெகா வாட் அளவிற்கான மின் தேவையை தமிழ்நாடு மின் உற்றபத்தி மற்றும் பகிர்மான கழகம் பூர்த்தி செய்து இருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் மின்வெட்டுகள் இருந்தாலும் கூட தமிழகத்தில் சீரான மின் விநியோகம் செய்யப்பட வேண்டும், தடையில்லா மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பது தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணை.

இந்த கோடைகாலத்தில் சீரான மின் விநியோகம் வழங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு. அந்த உத்தரவின் அடிப்படையில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுக்குமாறு அலுவலர்கள் அனைவரையும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்  அவர்கள்  கேட்டுக் கொண்டார்.

பின்னர், மாண்புமிகு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்  அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரம் மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை ஆய்வு செய்தார்.